# இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் - கிளிநொச்சி

## திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

## தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2021

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இரு பாலரிடமுமிருந்து 2021ஆம் கல்வி ஆண்டுக்கான அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. (அ) வயது** – 30.04.2021ம் திகதியன்று 16 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

**(ஆ) கல்வித் தகைமை –**

க.பொ.த (சா / த) பரீட்சையில் தமிழ் / சிங்களம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

குறித்த துறைசார் தேசிய தொழிற்தகைமை மட்டம் - 3 (NVQ/Level-3) சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**விஷேட திறமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு**

புத்தாக்கங்களில் ஈடுபட்டு தேசிய / மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழினை வைத்திருப்போரின் விண்ணப்பங்கள் விஷேட கவனத்திற் கொள்ளப்படும்.

குறிப்பு: தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையில் (NAITA) 02 அல்லது அதற்கு மேற்பட்ட வருட பயிற்சியினை மேற்கொள்வோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

**02. பயிற்சிநெறி போதனை மொழி**

எல்லா பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். க.பொ.த (சா/த) ஆங்கில அறிவு இப்பயிற்சிகளைத் தொடர்வதற்கு போதுமானது. உமது ஆங்கில அறிவினை அபிவிருத்தி செய்வதற்கான விஷேட ஆங்கில வகுப்புக்கள் நடாத்தப்படும்.

**03. நுழைவுத் தேர்வு**

தேவையான தகைமைகளையுடைய, கீழே 04ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரி மாத்திரம் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**(அ) பரீட்சைக்கான மொழி :** தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்.

**(ஆ) பரீட்சை நிலையங்கள் :**

அனுமதிக்கான எழுத்து மூலப் பரீட்சை, கிளிநொச்சி / கொழும்பு / கண்டி / மட்டக்களப்பு ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சைகள் இரத்து செய்யப்பட்டு தாங்கள் விரும்பும் மற்றைய பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவீர்.

**எழுத்து மூலப் பரீட்சை**

கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் மற்றும் வரைதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**04. பரீட்சைக்கட்டணம்**

விண்ணப்பதாரிகள் ரூபா 500/= ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கி கிளையில் கீழேயுள்ள கணக்கிற்கு வைப்பிலிட்டு, அதன் பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**கணக்கு விபரங்கள்:**

கணக்காளர், இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம், கிளிநொச்சிக் கிளை கணக்கு இலக்கம் 048-1-001-8-0086726.

சிதைவடைந்த, அழிந்து போன, மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**05. ஆரம்பத் தேர்வு முறை**

எழுத்துமூலப் பரீட்சையில் ஆகக்கூடுதல் புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியில் இருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின் தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப குறைக்கப்படும்.

**06. இறுதித் தேர்வு**

நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுவோர்கள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகளும் கவனத்திற்கொள்ளப்படும்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சி தொடர அனுமதிக்கப்படமாட்டார்.

**07. பயிற்சி நெறிகள் (NVQ – Level 4)**

| தொ. இல | பயிற்சி நெறிகள் | காலம் |
|---|---|---|
| 01 | மோட்டார் வாகன திருத்துனர் | 02 வருடங்கள் |
| 02 | மோட்டார் வாகன மின்சாரவியலாளர் | 02 வருடங்கள் |
| 03 | வலு மின்சாரவியலாளர் | 02 வருடங்கள் |
| 04 | காற்று பதனமாக்கலும் குளிரூட்டலும் | 02 வருடங்கள் |
| 05 | இலத்திரனியல் | 02 வருடங்கள் |
| 06 | இயந்திர இயக்குனர் (ஆயுத இயந்திரம்) | 02 வருடங்கள் |
| 07 | உருக்கியிணைத்தல் | 02 வருடங்கள் |
| 08 | வெதுப்பகர் | 02 வருடங்கள் |
| 09 | உணவு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் |
| 10 | கணிய அளவை உதவியாளர் | 02 வருடங்கள் |
| 11 | பட வரைஞர் | 02 வருடங்கள் |
| 12 | கட்டுமான தள மேற்பார்வையாளர் | 02 வருடங்கள் |
| 13 | நில அளவைப் புல உதவியாளர் | 02 வருடங்கள் |
| 14 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் |
| 15 | கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் |

முதல் மூன்று மாத கால அடிப்படைப்பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் துறை தேர் பரீட்சையில் தாங்கள் பெற்ற புள்ளிகள், ஆற்றல்கள் மற்றும் தங்கள் விருப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தங்களது துறை தெரிவு செய்யப்படும்.

**08. பிணைமுறி கைச்சாத்திடல்**

அனைத்து பயிலுனர்களும் இ.ஜே.ப.நிறுவனத்தில் 02 வருட பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

**09. விண்ணப்பித்தல்**

இணையத்தளம் **www.slgti.com** இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு அதனுடன்

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

(ஆ) கல்விச் சான்றிதழ்

(இ) இலக்கம் 1இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். (இருந்தால் மட்டும்)

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழு நேரப் பயிற்சிநெறிக்கு பயிலுனர்களைச் சேர்த்தல் 2021" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்.**

- www.slgti.com என்னும் இணையத்தளத்திலிருந்து
- நிறுவனத்திற்கு சமுகமளிப்பதன் மூலம்

**10. விண்ணப்ப முடிவு திகதி**

விண்ணப்பங்கள் 30.04.2021ம் திகதி அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கப் பெறக்கூடியவாறு அதிபர் அவர்கட்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**11. பரீட்சை அனுமதிப் பத்திரம்**

தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 17.05.2021ம் திகதியளவில் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

"நிபுணதா சிசு சவிய" திட்டத்தின் கீழ் மாதாந்தம் உதவித் தொகையாக ரூபாய் 4000/= பயிலுனர்களுக்கு வழங்கப்படும்.

வெளி மாகாணங்களைச் சேர்ந்த பயிலுனர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.

அதிபர்,
இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்,
அறிவியல் நகர்,
கிளிநொச்சி.
தொலைபேசி இல:- 0214927799

SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

tamilguru.lk